1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இல்லை என்று பதில் சொன்னேன். மேல்விஷாரத்தில் ஏற்கெனவே இருந்த மருத்துவ மனையை அரசு கடந்த ஆண்டு எடுத்துக் கொண்டது. அதை எடுப்பதற்கு முன் ஒரு லட்சம் ரூபாய் அரசுக்கு நன்கொடை தருவதாக வாக்களித்திருந்தார்கள்; இன்னும் தரவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் அந்தத் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த வாய்ப்பு ஆகும்.

தானிப்பாடி மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம்

*421 **வினா—திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்தில் அரசினர் மருத்துவ மனைக்கென புதிதாகக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) தானிப்பாடி கிராமத்தில் ரூ. 4,60,000 செலவில் 16 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவமனையும், வெளிநோயாளிப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, சமையலறை, சவப்பிரிவு முதலியவைகளையும் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன்: தலைவரவர்களே, அடுத்தாண்டிலாவது இந்தக் கட்டடம் நிறைவு பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்போதே கட்டட வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே கட்டி முடிக்கப்படும்.

சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி

*422 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கென தமிழ்நாடு அரசு மத்திய அரசினரிடம் "சிறப்பு நிதி" ஏதேனும் கோரியுள்ளதா?